13.04.2016

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

## தடுப்பணைகள் இல்லாததால் கோடைக்காலங்களில் கடும் வறட்சி ஏற்படுகிறது

காஞ்சிபுரம்: மூன்று ஆறுகள் ஒடும் காஞ்சிபுரம் மாவட்டக்கில் தடுப்பணைகள் இல்லாததால் கோடைக்காலங்களில் கடும் வறட்சி ஏற்படுகிறது. காஞ்சிபுரம் காஞ்சபுரமாக மாறுவதைத் தடுக்க உடனடியாக தடுப்பணை அமைக்க வேண்டும் என்று சமூக ஆர்வலர்கள் வலியுறுத்துகின்றனர்.

காஞ்சிபுரம் நகரின் தீராத பிரச்னைகள் குறித்து பல்வேறு அமைப்புகளிடம் கேட்டபோது அவர்கள் கூறியது:

மக்கள் சிவில் உரிமைக் கழகத்தின் மாவட்டத் தலைவர் த.தமிழினியன்: காஞ்சிபுரம் மாவட்டத்தில் பாலாறு, செய்யாறு, வேகவதி ஆகிய மூன்று ஆறுகள் கலக்கின்றன. இந்த ஆறுகள் திருமுக்கூடல் பகுதியில் ஒன்று சேர்கின்றன.

காஞ்சிபுரம் மாவட்டக்கின் குடிநீர் தேவை, விவசாயக் தேவையைப் பூர்த்தி செய்ய தடுப்பணை கட்ட வேண்டும் என்று கோரிக்கை பல ஆண்டுகளாக இருந்து வருகிறது. ஆனால் தடுப்பணைகளை யாரும் கட்டவில்லை. பேருந்து நிலையத்தை தேசிய நெடுஞ்சாலை இருக்கும் பகுதியில் அமைக்க வேண்டும். உள்பகுதியில் இடநெருக்கடியான இடத்தில் பேருந்து நிலையம் இருப்பதால், நகரம் துண்டிக்கப்பட்டு காஞ்சிபுரத்தில் வளர்ச்சி பாதிக்கப்படுகிறது.

சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருமால்பூர் வழியாக, அரக்கோணம், வேலூரை இணைக்கும் வகையில் ரயில் பாதை அமைக்க வேண்டும். ஆனால் திருமால்பூர்- அரக்கோணம் சாலையில் விமானப்படைத் தளம் இருப்பதால் மாற்று வழிப்பாதையில் ரயில் பாதை இணைக்கப்படாமல் உள்ளது.

காஞ்சிபுரம் மாவட்டக்தில் பல்வேறு தொழிற்சாலைகள் உள்ளன. ஆனால் இங்கு தொழிலாளர் காப்பீட்டுக் கழக மருத்துவமனைகள் இல்லை. எனவே காஞ்சிபுரம் மாவட்டத்தில் இஎஸ்ஐ மருத்துவமனையை நிறுவ வேண்டும்.

வெளிச்சம் அமைப்பின் தலைவர் மேகநாதன்: காஞ்சிபுரம் பகுதியில் உள்ள பாலாற்றுக் குடிநீரை காஞ்சிபுரம் மக்களுக்கு வழங்க வேண்டும் என்ற நீண்ட நாள் கோரிக்கை நிறைவேறாமல் உள்ளது. காஞ்சிபுரம் பகுதியில் உள்ள பொன்னேரி ஆக்கிரமிக்கப்படுகிறது. அரசே வீட்டுவசதித் துறை மூலம் இங்கு வீடுகளைக் கட்டுகிறது. ஏரிகளைப் பாதுகாக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

சமூக ஆர்வலர் விஜயகுமார்: காஞ்சிபுரம், பாலாற்று பாலக்தில் மின்விளக்கு வசதி ஏற்படுத்தாததால் அப் பகுதியில் அடிக்கடி விபத்து ஏற்படுகிறது. அதேபோல தொழிற்சாலைக் கழிவுகள் பாலாற்றில் கொட்டப்பட்டு ஆற்றை மாசுபடுத்தும் செயல்களில் பலர் ஈடுபட்டுள்ளனர். இவற்றை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சமூக ஆர்வலர் மழைக்காதர்: காஞ்சிபுரத்தில் வெள்ளநீர் வடிகால் பெயரளவுக்குக்கூட இல்லை. இதனால், அனைத்து தண்ணீரும் நகர்ப்புறத்தில் தேங்கி கொசுக்கள் பெருகுகின்றன. வடிகால்கள் பல ஆண்டுகளாக சீரமைக்கப்படாமல் உள்ளன.

அதேபோல காஞ்சிபுரம் அரசு மருத்துவமனையில் விபத்தில் சிக்குபவர்களுக்கு சிகிச்சை அளிக்க போதிய வசதி இல்லை.

இரவு நேரங்களில் விபத்தில் சிக்கினால் அவர்களுக்கு சிகிச்சை அளிக்க போதிய மருத்துவர்களும் இல்லை. எனவே பெரும்பாலானோர் செங்கல்பட்டு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பப்படுகின்றனர். காஞ்சிபுரம் அரசு மருத்துவமனை தரம் உயர்த்தப்படாமல் உள்ளது கவலைக்குரியது.

**கோடை சீசன்: ரோஜா பூங்காவில் பூத்துக் குலுங்கும் மலர்கள்**

உதகையில் கோடை சீசன் தொடங்கியுள்ள நிலையில், ரோஜா பூங்காவில் பல வண்ண ரோஜா மலர்கள் பூத்துக் குலுங்குகின்றன.

கோடை சீசன் என்றாலே ஆயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் உதகைக்கு வருகை தருவது வழக்கம். நடப்பு ஆண்டில் தேர்தல் காரணமாக மே மாதம் முதல் வாரத்தில் நடைபெற வேண்டிய ரோஜா கண்காட்சி ரத்து செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், தற்போது ரோஜா பூங்காவில் பல வண்ண ரோஜா மலர்கள் பூத்துக் குலுங்குகின்றன. ரோஜாவைப் பொறுத்தமட்டில் புளோரிபண்டா, ஹைபிரிட், கிரீப்பர்ஸ் உள்ளிட்ட 5 வகைகள் உள்ளன. இந்த 5 வகைகளையும் சேர்ந்த சுமார் 4,000 ரகங்களில் 30,000 ரோஜா மலர்ச் செடிகள் பூங்காவில் நடவு செய்யப்பட்டுள்ளன. இதில், 25,000-க்கும் மேற்பட்ட செடிகளில் பல வண்ணங்களிலான ரோஜா மலர்கள் தற்போது பூத்துள்ளன.

உதகையைப் பொறுத்தமட்டில் காலை நேரங்களில் வெயிலும், பிற்பகலில் லேசான மழையும், இரவில் பனியுடன் கூடிய குளிர்ந்த கால நிலையுமாக 3 வித காலநிலைகள் நிலவுகின்றன. சமவெளிப் பகுதிகளில் கடும் வெயில் நிலவிவருவதால் உதகைக்கு சுற்றுலாப் பயணிகளின் வரத்து அதிகரித்துள்ளது.

உதகை அரசினர் ரோஜா பூங்காவைப் பொறுத்தமட்டில் பல்வேறு வண்ணங்களிலான ரோஜா மலர்கள் ஒரே இடத்தில் பூத்துக் குலுங்குவதைக் காண நாள்தோறும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவது, தோட்டக்கலைத் துறையினரிடையே மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

குறிப்பாக, பூங்காவில் உள்ள தாஜ்மஹால், லேடிபேர்டு, பெர்பெக்ட் மூவ்மென்ட், மார்க்கோபோலோ, லெமென்டா, எடர்னியா போன்ற ரகங்கள் சுற்றுலாப் பயணிகளை வெகுவாகக் கவரும் ரகங்களாக உள்ளன. மேலும், இந்த ஆண்டில் ஆடம்பரமான விழா ஏதும் இல்லாததால் எத்தகைய கெடுபிடியுமின்றி இயல்பாக பூங்காவுக்கு வந்து

செல்ல முடியும். இதனால், உள்ளூர் மக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் அதிகளவிலானோர் ரோஜா பூங்காவுக்கு வந்து செல்கின்றனர்.

## கிருஷ்ணகிரி அணை சீரமைப்பு பணி போச்சம்பள்ளி பகுதி ஏரிகள் நிரம்பியதால் விவசாயிகள் மகிழ்ச்சி

போச்சம்பள்ளி பகுதி ஏரிகள் நிரம்பியதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

கர்நாடக மாநிலம், நந்திமலையில் உற்பத்தியாகும் தென்பெண்ணை ஆற்று நீர், கெலவரஹள்ளி வழியாக கிருஷ்ணகிரி அணையை வந்தடைகிறது. கிருஷ்ணகிரி அணை நிரம்பியதும் அங்கிருந்து பிரதான கால்வாய் வழியாக பாரூர் பெரிய ஏரிக்கு தண்ணீர் திறந்து விடப்படுகிறது. இந்த அணை தமிழக முன்னாள் முதல்வர் காமராஜரால் 1955-ஆம் ஆண்டு கட்டப்பட்டது. அணையில் இதுவரை சிறிய அளவில் மட்டுமே பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. தற்போது அணை கட்டப்பட்டு 50 ஆண்டுகள் கடந்த நிலையில், 8 பிரதான மதகுகளை சீரமைப்பு செய்யும் பணியில் பொதுப்பணித் துறை அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர். இதன் காரணமாக தென்பெண்ணை ஆற்றில், அணை மதகுகள் வழியாக 700 கன அடி தண்ணீர் திறந்து விடப்படுகிறது. இதன் மூலம் பாரூர் பெரிய ஏரிக்கு தண்ணீர் விடப்பட்டு, ஏரியில் இருந்து தற்போது போச்சம்பள்ளி, கோணனூர் ஏரி வழியாக திருவயலூர் ஏரி, புளியம்பட்டி ஏரி, கெங்கிநாய்க்கம்பட்டி ஏரி உள்ளிட்ட ஏரிகள் வேகமாக நிரம்பின. இதையடுத்து தற்போது பெனுகொண்டாபுரம் ஏரி, மலையாண்டஹள்ளி ஏரிக்கு தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது.

இதனால் நிகழாண்டில் தண்ணீர் பஞ்சமின்றி நீர் நிலைகள் உயர்ந்து வருவதால் போச்சம்பள்ளி உள்ளிட்ட சுற்றுவட்டாரக் கிராமப் பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் மகழ்ச்சியடைந்துள்ளனர்.

**வேளாண் அறிவியல் மையத்தில் ஏப். 15-ல் நிலக்கடலை பிரித்தெடுக்கும் கருவி செயல்விளக்கம்**

அரியலூர் மாவட்டம், சோழமாதேவி கிரீடு வேளாண் அறிவியல் மையத்தில் ஏப். 15-ம் தேதி நிலக்கடலை பிரித்தெடுக்கும் கருவி செயல்விளக்கம் நடைபெறுகிறது.

இதுகுறித்து மையத்தின் தலைவர் நடனசபாபதி செவ்வாய்க்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

அரியலூர் மாவட்டத்தில் பரவலாக நிலக்கடலை சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. தற்போது விவசாயிகள் அறுவடைப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில், விவசாயிகள் பயன்பெறும் விதமாக இம்மையம் சார்பில் விவசாயிகளுக்கு நிலக்கடலை பிரித்துதெடுக்கும் செயல்விளக்கம் குறித்து பல்வேறு முகாம்கள் நடத்தப்பட்டாலும் அதுபற்றிய போதிய விழப்புணர்வு இல்லை.

இதை கருத்தில் கொண்டு விவசாயிகளுக்கு மேலும் ஊக்கப்படுத்தும் வகையில் சோழமாதேவி கிரீடு வேளாண் அறிவியல் மைய கூட்டரங்கில் வரும் 15-ம் தேதி காலை 10 மணியளவில் நிலக்கடலை பிரித்து எடுக்கும் கருவியின் செயல்விளக்கம் செய்து காட்டப்படவுள்ளது.

அரியலூர் மாவட்ட நிலக்கடலை விவசாயிகள் இந்த செயல்விளக்க முகாமில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு அவர் தெரிவித்துள்ளார்.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### மதிப்புக் கூட்டப்பட்ட மல்லிகை

மலர்ந்து ஒரே நாளில் வாடிவிடும் மல்லிகையில் இருந்து, மல்லிகைப்பசை தயாரித்து 5 ஆண்டுகள் வரை வைத்திருந்து பயன்படுத்தலாம். வெயில் காலத்தில் அதிகமாக மலரும் மல்லிகைக்கு விலை இல்லாமல் விவசாயிகள் வருத்தப்படுவர். இவற்றைப் பசையாக்கினால் இறக்குமதி செய்ய பிரான்சும், அமெரிக்காவும் தயாராக உள்ளன. 875 கிலோ மல்லிகைப்பூவைப் பயன்படுத்தி 1 கிலோ மல்லிகைப் பசைதயாரிக்கலாம். ஷாம்பு, சோப்பு, ஹேர் ஆயில், முககிரீம்,அகர்பத்திகள் போன்றவற்றுக்கு வாசனையூட்ட மல்லிகைப்பசை பயன்படுத்தப் படுகிறது. மல்லிகைப்பூவில் இருந்து தேநீரும் தயாரிக்கலாம்.

### தக்காளி விலை திடீர் உயர்வு: ரூ. 7க்கு விற்றது 15 ஆனது

சத்தியமங்கலம்: சத்தியமங்கலம் பகுதியில் தக்காளி வரத்து குறைவால் விலை அதிகரித்துள்ளது. சத்தியமங்கலம் பகுதியில் விவசாயிகள் பல்வேறு பயிர்களுடன் ஊடுபயிராக தக்காளியை பயிரிட்டுள்ளனர். இதுதவிர தாளவாடி மலைப்பகுதியிலும் விவசாயிகள் அதிக அளவில் தக்காளி சாகுபடி செய்கின்றனர். வரத்து அதிகமாக இருந்த காரணத்தால் கடந்த வாரம் வரை, ஒரு கிலோ, ஏழு ரூபாய்க்கு விற்றது. சில்லரை தட்டுப்பாட்டால், 10 ரூபாய்க்கு ஒன்றரை கிலோவாக விவசாயிகள் விற்றனர். இந்நிலையில் கடும் வெப்பத்தால் விளைச்சல் குறைந்துள்ளது. இதனால் கடந்த இரண்டு நாட்களாக சத்தியமங்கலம் பகுதியில், ஒரு கிலோ, 15 ரூபாயாக அதிகரித்து விட்டது.

**ஒட்டன்சத்திரத்தில் வெங்காயம் ஏறுமுகம்**

ஒட்டன்சத்திரம்: வெயிலின் தாக்கம் காரணமாக விளைச்சல் குறைந்ததால், ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டில் சின்ன வெங்காயம் விலை ஏறுமுகமாக உள்ளது.

ஒட்டன்சத்திரம், காவேரியம்மாபட்டி, விருப்பாட்சி, அம்பிளிக்கை, கேதையுறும்பு மற்றும் இதனைச் சுற்றி உள்ள பகுதிகளில் சின்ன வெங்காயம் அதிகமாக பயிரிடப்பட்டுள்ளது.

கடந்த சில நாட்களுக்கு முன்பு வரை வரத்து அதிகமாக இருந்ததால் விலையும் இறங்குமுகமாகவே காணப்பட்டது. விலை கட்டுபடியாகாமல் இருந்ததால் விவசாயிகளில் பலர், மூங்கில் பட்டறை அமைத்து வெங்காயத்தை பாதுகாத்து வருகின்றனர்.

நல்ல விலை கிடைக்கும் போது விற்கலாம் என காத்து இருக்கின்றனர். இந்நிலையில் கடந்த சில நாட்களாக வெயிலின் தாக்கம் அதிகரித்துள்ளதால் விளையும் நிலையில் இருந்த வெங்காயம் பாதிக்கப்பட்டது. இதனால் மகசூல் குறையத் தொடங்கியதை தொடர்ந்து, மார்க்கெட்டிற்கு வரத்தும் குறைந்துள்ளது.

அதற்கேற்ப விலையும் அதிகரிக்க தொடங்கி உள்ளது. மார்க்கெட்டில் முதல் தரமான வெங்காயம் கிலோ ரூ.25க்கு விற்றது. இதற்கு முன்பு கிலோ ரூ.20 க்கும் குறைவாக விற்றது.

வியாபாரி ஒருவர் கூறுகையில்,“ இனிவரும் நாட்களில் வரத்து இன்னும் குறைய வாய்ப்புள்ளதால், விலை அதிகரிக்கலாம்,” என்றார்.

**ஏமாற்றிய கோடை மழையால் உச்சத்தில் காய்கறிகளின் விலை**

பழநி: போதிய மழையில்லாத காரணத்தால் காய்கறி விளைச்சல் பழநி பகுதியில் பாதிக்கப்பட்டுள்ளது. கடந்த வாரம் சந்தையில் கிலோ ரூ.8க்கு விற்ற தக்காளி தற்போது கிலோ ரூ.17 வரை விற்கப்படுகிறது.

பழநி பகுதியில் கணக்கன்பட்டி, கோம்பைபட்டி, கரடிகூட்டம், தாமரைக்குளம், கரிக்காரன்புதுōர் உட்பட பல்வேறு பகுதிகளில்,

சொட்டுநீர்ப்பாசனம், கிணற்றுப்பாசனம் மூலம் தக்காளி, கத்தரிக்காய், முட்டைக்கோஸ், காலிபிளவர் சாகுபடி செய்கின்றனர்.

தற்போது வெயிலின் தாக்கம் அதிகரித்துள்ளது. மேலும் கோடை மழை பெய்யாத காரணத்தால் தக்காளி, கத்தரிக்காய், காலிபிளவர், உருளை, பீட்ரூட், வெண்டை உள்ளிட்ட காய்கறிகளின் விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக மார்க்கெட், உழவர் சந்தைக்கு வரத்துகுறைந்துள்ளது. ஒருவாரத்தில் கிலோ ரூ.4 முதல் ரூ.5 வரை விலை அதிகரித்துள்ளது. கடந்தவாரம் கிலோ ரூ. 7க்கு விற்ற தக்காளி தற்போது ரூ.18க்கும், வெண்டைக்காய் ரூ.15ல் இருந்து ரூ.20ஆகவும், பீட்ரூட் ரூ. 18ல் ரூ.20 ஆகவும் உயர்ந்துள்ளது.

உழவர் சந்தை காய்கறி நிலவரம்: (ஒரு கிலோ) கத்தரிக்காய் ரூ. 22, முருங்கைக்காய் ரூ. 5 முதல் 12, முட்டைக்கோஸ்-10, தக்காளி ரூ.14 முதல் 18, கேரட் ரூ.50, வெண்டைக்காய் ரூ.30, உருளைக்கிழங்கு ரூ. 26. நுூக்கல்-20. கருணைக்கிழங்கு-30, மாங்காய் ரூ.15, பச்சைமிளகாய் ரூ.48. முருங்கபீன்ஸ் ரூ.70 ஆக உள்ளது.

## கோடையிலும் வற்றாத ஜீவ கிணறு

வாங்கப்பாளையம்: கரூர் பஞ்சாயத்து யூனியனுக்கு உட்பட்ட பகுதியான வாங்கப்பாளையத்தில் கோடையிலும் வற்றாத ஜீவ ஊற்றாக கிணற்றில் நீர் ததும்பி அப்பகுதி விவசாயிகளுக்கு பயன்பட்டு வருகிறது.

கரூரில் இருந்து, சேலம் செல்லும் பழைய பைபாஸ் சாலையில் அமைந்துள்ளது வாங்கப்பாளையம். இப்பகுதியில் சாலையோரம் பெரிய கிணறு ஒன்று உள்ளது. இது இப்பகுதி மக்களுக்கு குறிப்பாக, விவசாயிகளுக்கு கைகொடுத்து வருவது குறிப்பிடத்தக்கது.

இதுகுறித்து, வாங்கப்பாளையம் மாரியப்பன், 55, கூறியதாவது: கரூர், வாங்கப்பாளையம் வெண்ணை மலைப்பட்டியில் அமைந்துள்ள சக்தி விநாயகர், பகவதி அம்மன் கோவிலுக்கு வருபவர்கள் எதிரில் உள்ள இந்த குளத்தில் நீராடி விட்டுச் செல்வது வழக்கம். ஆழம், 50 அடிக்கும் மேல் இருப்பதால் படிகளில் யாரும் இறங்காமல் இருக்க கம்பிவேலியுடன் தற்போது கேட் போட்டு பூட்டி வைத்துள்ளனர். ஒரு காலத்தில் நூற்றுக்கணக்கான ஏக்கரில் இந்த குளத்தை நம்பி விவசாயம் செய்து வந்தோம். தற்போது நிலங்கள் சுருங்கியதன் காரணமாக இருக்கும் நிலத்தில் இந்த கிணற்றில் இருந்து மோட்டார் மூலம் தண்ணீர் எடுத்து பயன்படுத்தி வருகிறோம். இருப்பினும் வற்றாத ஜீவ கிணறாக இப்பகுதியில் விளங்குகிறது. பொதுமக்களுக்கு மட்டுமின்றி விவசாயிகளுக்கும் பயனுள்ளதாக இந்தக்குளம் விளங்கி வருகிறது குறிப்பிடத்தக்கது.இவ்வாறு அவர் கூறினார்.

## கோடையில் முலாம்பழம் விற்பனை அமோகம்

வாங்கப்பாளையம்: கரூரில், கோடை வெயில் வாட்டி எடுக்கும் நிலையில் வெள்ளரி, தர்பூசணி, கரும்பு ஜூஸ் வரிசையில் தற்போது முலாம்பழம் விற்பனை களைகட்டி வருகிறது.

இதுகுறித்து. சேலம் மாவட்டம், பணமடல் சுப்பிரமணி கூறியதாவது: கோடை காலத்தில் முலாம் பழம் பயிர் செய்யப்படுவது வழக்கம். குறிப்பாக, பங்குனி, சித்திரை, வைகாசி போன்ற மாதங்களில் முலாம் பழம் செழித்து வளரும். இதை பறித்து வந்து பல்வேறு இடங்களில் வேன்கள் மூலம் ஆங்காங்கே கடைகள் போட்டு விற்பனை செய்து வருகிறோம். இந்த முலாம் பழம் உடல் சூட்டைத் தணிக்கும் குணமுடையது என்பதால், அனைவரும் இதை விரும்பி வாங்கிச் செல்கின்றனர். ஒரு கிலோ, 30 ரூபாய்க்கும், இரண்டு கிலோவாக வாங்கினால், 50 ரூபாய்க்கும் விற்பனை செய்து வருகிறோம். இந்த முலாம்பழத்தை உரித்து சர்க்கரையுடன் கலந்து சாப்பிட்டால் சுவை அதிகமாக இருக்கும். சர்க்கரை நோய் உள்ளவர்கள் இந்த முலாம் பழத்தை எடுத்து ஜூஸ் போட்டும் குடிக்கின்றனர். சிறுவர்கள் முதல்

பெரியவர் வரை விரும்பி உண்ணும் பழமாக கோடையில் முலாம் பழம் திகழ்கிறது. இவ்வாறு அவர் கூறினார்.

## ஏலத்தோட்டங்களில் சாரல்; காய் விலை அதிகரிப்பு

கம்பம்: இடுக்கி மாவட்ட ஏலத்தோட்டங்களில் கடந்த சில நாட்களாக சாரல் பெய்து வருகிறது. அதிகபட்ச வெயிலால் பாதிக்கப்பட்டிருந்த ஏலச்செடிகள் உயிர் பிடித்து ,விலையும் கணிசமாக அதிகரிக்கத் துவங்கியுள்ளது.

இடுக்கி மாவட்டத்தில் ஆயிரக்கணக்கான ஏக்கர் பரப்பில் ஏலத்தோட்டங்கள் பெரும்பாலும் தமிழர்களிடம் உள்ளன.

ஏலக்காயை பொறுத்தவரை விலை, மகசூல், நோய் தாக்குதல் என ஏதாவது ஒரு வழியில் விவசாயிகளுக்கு தலைவலியை கொடுத்துக் கொண்டிருக்கும். கடந்தாண்டு நவம்பருக்கு பின் மழை பெய்யாமல் தொடர் வறட்சியால் ஏலச்செடிகள் காய்ந்து விழத் துவங்கிவிட்டன. இந்நிலையில் கடந்த சில நாட்களாக நெடுங்கண்டம், பாரத்தோடு, வண்டன்மேடு, அந்நியார்தொழு, சங்குண்டான், சுல்த்தானியா, புளியன்மலை, மாதவன்கானல், சாஸ்தான்ஓடை உள்ளிட்ட அனைத்து பகுதிகளிலும் சாரல் மழை பெய்து வருகிறது. இதனால் ஏலச் செடிகள் உயிர் பிடிக்கத் துவங்கியுள்ளன.

ஆயினும் மகசூல் பாதிப்பு 40 சதவீதம் குறையும் என மதிப்பிடப்படுகிறது. மேலும் காய் வரத்து ஆகஸ்ட் மாதத்திற்கு தள்ளிப் போகும் என்றும் கூறப்படுகிறது. தற்போது விலை சராசரியாக ரூ.100 உயர்ந்து கிலோவிற்கு ரூ. 600 வரை கிடைக்கிறது. ஆனால் நிலையாக இல்லை. மகசூலில் மேலும் பாதிப்பு ஏற்படாமல் இருக்க மழை தொடர வேண்டும் என விவசாயிகள் காத்துள்ளனர்.---

## தரமான மரக்கன்றுகள்: வனத்துறை விற்பனை

சேலம்: வனத்துறை சார்பில், தரமான மரக்கன்றுகள் விற்கப்படுகின்றன. சேலம், சித்தர்கோவில் அருகே வனவியல் விரிவாக்க கோட்டம், மத்திய நாற்றங்கால் வளர்ப்பு மையம், தேக்கு, பேயன், மலைவேம்பு,

நாட்டுவேம்பு உள்ளிட்ட பலன் தரும் மரக்கன்றுகளை உற்பத்தி செய்து, விற்பனைக்கு தயார் நிலையில் வைத்துள்ளன. தனியார் நர்சரிகளில் மட்டும் கிடைத்த, இதுபோன்ற மரக்கன்றுகள், தற்போது அரசின் வனத்துறை மூலம் உற்பத்தி செய்து, குறைந்த விலையில் தரமான மரக்கன்றுகளை விற்பனைக்கு வைத்துள்ளனர். மரக்கன்று ஒன்று, ஆறு ரூபாய்க்கு கிடைக்கும், மரக்கன்று பராமரிப்பு முறை, இலவசமாக வழங்கப்படும் என, நகரின் முக்கிய பகுதிகளில் விளம்பரத்தட்டிகள் வைக்கப்பட்டுள்ளன.

## ரூ.1.40 கோடிக்கு மஞ்சள் வர்த்தகம்

நாமகிரிப்பேட்டை: நாமகிரிப்பேட்டையில், நேற்று, 1.40 கோடி ரூபாய்க்கு மஞ்சள் வர்த்தகம் நடந்தது. நாமகிரிப்பேட்டையில் நேற்று மஞ்சள் ஏலம் நடந்தது. ஆர்.சி.எம்.எஸ். உள்பட, 18 தனியார் மண்டிகளிலும் மஞ்சள் வரத்து அதிகரித்திருந்தது. இதில், விரலி ரகம் அதிகபட்சம், 100 கிலோ மூட்டை, 11,321 ரூபாய், குறைந்தபட்சம், 9,185 ரூபாய்க்கு ஏலம் போனது. உருண்டை ரகம் அதிகபட்சம், 9,799 ரூபாய், குறைந்தபட்சம், 8,669 ரூபாய்க்கு விற்பனையானது. பனங்காலி ரகம் அதிகபட்சம், 24,500 ரூபாய்க்கு ஏலம் போனது. விரலி, 1,600 மூட்டைகளும், உருண்டை, 600, பனங்காலி, 150 என மொத்தம், 2,350 மூட்டைகளும், ஒரு கோடியே, 40 லட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது.

**தக்காளியை தாக்குகிறது காய்ப்புழு - நுகர்வோருக்கு தேவை விழிப்புணர்வு**



தக்காளியில் இலைத் துளைப்பான் பிரச்னை, நுண்காய் துளைப்பான் பிரச்னை அதிகளவில் உள்ளது.

ஆப்ரிக்காவில் இருந்து சமீபகாலமாக தமிழகத்திற்கு வந்தது இப்பிரச்னை. முதன்முதலில் ஓசூரில் இந்நோய் கண்டறியப்பட்டது. அடுத்து தர்மபுரி, கிருஷ்ணகிரியைத் தாக்கியதோடு மதுரை, திண்டுக்கல் பகுதி தக்காளி விவசாயத்தையும் அதிகமாக பாதிக்கிறது. மதுரை, திண்டுக்கல்லில் தக்காளி சாகுபடி அதிகம் என்பதால் பிரச்னையும் தீவிரமாக உள்ளது.

ஒட்டன்சத்திரம், நிலக்கோட்டை, அழகர்கோவில், தாதைய கவுண்டன்பட்டி, வாடிப்பட்டி, கெங்குவார் பட்டியைச் சுற்றி நோய்த்தாக்குதல் இருப்பதை விவசாயக் கல்லூரி பூச்சியியல் துறை ஆய்வு செய்தது. இலைசுரங்கப்புழுவானது இலையின் நடுவில் நெளிந்து நுழைந்திருக்கும். நுண்காய் துளைப்பான் பூச்சியானது காயில் ஓட்டையிடும். இதனால் காய்கள் உதிர்ந்து அழுகிவிடும். இது புதியவகை

பூச்சி என்பதை விவசாயிகள் உணராமல் பழைய நோய்க்குள்ள மருந்தை தெளிக்கின்றனர். இது வெற்றியைத் தராது.

தக்காளியில் இலை, காய்களில் இந்த அடையாளத்தை பார்த்தால் இனக்கவர்ச்சி பொறி வைத்து பூச்சிகள் விழுகிறதா என்று பார்க்க வேண்டும். மஞ்சள் ஒட்டுப்பொறி வைத்தால் பூச்சிகள் விழுந்து சாகும். இவை இரண்டும் வைப்பதற்கு ஏக்கருக்கு ரூ.100 தான் செலவாகும். பூச்சிகளை கண்காணித்து அவற்றின் எண்ணிக்கையை வைத்தே பயிர் பாதுகாப்பு செய்ய முடியும். அது இல்லாமல் மருந்து தெளிக்கக்கூடாது. அதில் எண்ணிக்கையை கணக்கில் கொண்டு அடுத்த கட்டுப்பாட்டுக்கு முயற்சி செய்ய வேண்டும்.

வேப்பெண்ணெய், புங்கை எண்ணெய், வசம்பு கரைசல் போன்ற இயற்கை முறைகளை கையாள வேண்டும். இதில் ஒன்றிரண்டு நாட்கள் தாமதமாகலாம். அதிலும் கட்டுப்படி ஆகாவிட்டால் லிட்டருக்கு 0.5 மில்லி கிராம் 'இமிடோகுளோபிரிட்' கலந்து தெளிக்கலாம். மதுரை விவசாய கல்லூரி பூச்சியியல் துறைக்கு பூச்சிகளின் மாதிரிகளை பாலிதீன் பையில் கொண்டு வரவேண்டும். அப்போது தான் சேதத்தின் மதிப்பை கணக்கிட்டு பயிர் பாதுகாப்பு செய்யலாம். இனக்கவர்ச்சி பொறி, தாவர பூச்சிக்கொல்லி என ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளை கையாளவேண்டும்.

நுகர்வோருக்கு தேவை: உணவுப்பொருளை அழகுப்பொருளாக பார்க்கும் கலாசாரம் நம்மிடம் பெருகிவிட்டதே பூச்சிக்கொல்லி மருந்துகள் அதிகமாக காரணம். கண்ணாடி போல பளபளப்பாக காய்கறிகள் வேண்டும் என நுகர்வோர் எதிர்பார்க்கின்றனர். விஷமில்லாத நல்ல தரமான காய்கறி எனில் சொத்தை, சொரி இருக்கத் தான் செய்யும். கத்தரிக்காய், தக்காளியில் சொத்தை இருந்தால் பாதியை வெட்டி விடலாம். கொய்யாக்காயில் லேசாக சொரி இருந்தால் அதை சாப்பிடுவதால் உயிருக்கு ஆபத்தில்லை. காய்கறிகள் உருவாக்கப்படுவதில்லை; தானாக உருமாற்றம் பெறுகிறது. நுகர்வோர் இவற்றை வாங்க மறுப்பதால் தான் விவசாயிகள் ரசாயன பூச்சிக்கொல்லி மருந்துகளை பயன்படுத்துகின்றனர். இந்த காய்கறிகளை சாப்பிடுவது தான் நமக்கு ஆபத்து என்பதை நுகர்வோர் புரிந்து கொள்ள வேண்டும்.

**-மா.கல்யாணசுந்தரம், பூச்சியியல் துறைத்தலைவர் மதுரை விவசாய கல்லூரி 0452 - 242 2956.**

**ஒரே பயிர் சாகுபடி சாத்தியமில்லை!**



சிவகங்கை மதகுபட்டி பொன்குண்டுபட்டி அருகே வனப்பகுதி உள்ளது. வனத்தையொட்டிய பகுதியில் கண்ணுக்கு எட்டிய தூரம் வரை காரச்செடிகளே இருப்பதால் அப்பகுதியில் யாரும் விவசாயமும் செய்யவில்லை. ஆனால் பொன்குண்டுபட்டியைச் சேர்ந்த மாற்றுத்திறனாளி சி.சங்கப்புலி, 69, 'கல்லையும் பொன்னாக்க முடியும்,' என்ற வைராக்கியத்துடன் அப்பகுதியில் விவசாயம் செய்து வருகிறார். கையில் கோல் ஊன்றி தான் நடக்கிறார். கரடுமுரடாக இருந்த 8 ஏக்கர் காட்டுப்பகுதியை அழித்து விவசாய நிலமாக மாற்றியுள்ள சங்கப்புலி, தன் அனுபவங்களை விளக்கினார். பல அடியில் கிணறு தோண்டியும்

சரியாக தண்ணீர் ஊறாததால் கிணற்றுக்குள்ளே இரு ஆழ்துளை கிணறுகளை அமைத்தேன். நிலத்தை சீர்ப்படுத்த ரூ.3 லட்சம் செலவு செய்தேன்.

நிலங்களை சிறு, சிறு பகுதிகளாக பிரித்து தக்காளி, வெங்காயம், கடலை, தர்பூசணி, மிளகாய், கீரை வகைகள், கொத்தவரை, நெல் என 4 ஏக்கரில் பயிரிட்டுள்ளேன். மற்ற இடங்களில் தேக்கு, யூகலிப்டஸ், சவுக்கு போன்ற நீண்டகால பலன் தரக்கூடிய மரங்கள் வளர்க்கிறேன். இதன்மூலம் மாதம் ரூ.40 ஆயிரம் லாபம் கிடைக்கிறது.

எட்டு ஏக்கரிலும் தக்காளி, வெங்காயம், தர்பூசணி, மிளகாய், கீரை வகைகளை உள்ளூரிலேயே விற்பனை செய்வதால் தினமும் கையில் பணம் புரளும். களையெடுப்பு, உழவு செய்ய மட்டும் கூலி ஆட்களை பயன்படுத்துவேன். ஒவ்வொரு பயிரும் குறைவான அளவே பயிரிட்டுள்ளதால் காய், பழங்களை நானே பறிக்கிறேன். தர்பூசணி போன்ற சீசன் பயிர்களையும் பயிரிடுவேன். இதன்மூலம் யார் துணையும் இல்லாமல் வாழ்ந்து வருகிறேன், என்றார். வாழ்த்த 95852 52220.
**-இ.ஜெகன்னாதன், சிவகங்கை.**

**மண்ணை பொன்னாக்கும் தக்கை பூண்டு**



ரசாயன உரத்தால் புண்ணான மண்ணை தக்கைபூண்டு வளர்ப்பதின் மூலம் பொன்னாக்கும் வித்தையை கற்றுத் தருகிறார், சிவகாசி செல்லையநாயக்கன்பட்டி பகுதி விவசாயி திருவேங்கடராமானுஜம். அவர் கூறியது: இப்பகுதியில் மக்காச்சோளம் அதிகளவில் பயிரிடப்படுகிறது. மண்ணிலுள்ள தழைச்சத்தினை மக்காச்சோளம் அளவுக்கு அதிகமாக உறிஞ்சி எடுப்பதால் மண் வளம் பாதிக்கப்படுகிறது. அடுத்து பயிர் செய்யும் போது விவசாயம் பொலிவிழந்து வருவாய் கிடைப்பதில்லை.

இதற்கு பயந்தே பலர் மக்காச்சோளம் பயிர்செய்த பின் 3 அல்லது 6 மாதம் நிலத்தை வெறுமென விட்டு விடுவார்கள். அந்நேரத்தில் நிலம் பயனற்றே கிடக்கும். மக்காச்சோளம் அறுவடை செய்த பின் அந்நிலத்தில் கழிவுகளை அகற்றாமல் தக்கைபூண்டு செடி விதைகளை துாவவேண்டும். மூன்று வாரத்திற்குள் இச்செடி 5 அடி வரை வளர்ந்து நிலத்தை காடு போல் மாற்றிவிடுகிறது. இதை கால்நடைகளுக்கு உணவாகவும் கொடுக்கலாம். ஒரு மாதத்திற்கு பின் செடியை அப்படியே உழுது மண்ணிற்கு அடிஉரமாக மாற்றிவிடலாம். அதன்பின் எந்த பயிரை நடவு செய்தாலும் விவசாயம் பொய்க்காது. மண்வளம் பெற்று விவசாயம் செழிக்க ஆரம்பிக்கும்.

வேளாண்துறை அதிகாரிகளின் அறிவுரைபடி தக்கை பூண்டு செடியை பயிரிட்டேன். இச்செடி நிலத்திற்கு வேண்டிய சத்துக்களை எடுத்து கொடுக்கிறது. உரமாகவும் பயன்படுகிறது.

இதனால் மாற்று விவசாயத்திற்கு உரமிடும் செலவும் குறைகிறது. இது இயற்கை முறையில் நிலத்தை வளமாக்கும் எளியவழி என்றார். தொடர்புக்கு 96556 63232.

**எஸ்.சுகந்தன், விருதுநகர்**

## இன்றைய வேளாண் செய்திகள்

## களை கட்டியது மாட்டு சந்தை கூடுதல் விலைக்கு மாடுகள் விற்பனை



பொள்ளாச்சி : பொள்ளாச்சி சந்தையில், வெகுநாட்களுக்கு பிறகு நேற்று மாடு விற்பனை விறுவிறுப்புடன் காணப்பட்டது. மாடுகள் கூடுதல் விலைக்கு போனதாக வியாபாரிகள் தெரிவித்தனர். பொள்ளாச்சி மாட்டு சந்தைக்கு, செவ்வாய் மற்றும் வியாழக்கிழமைகளில் நடக்கும் சந்தை நாளின்போது சுற்றுவட்டார பகுதிகளிலிருந்து மட்டுமின்றி வெளி மாவட்டங்களில் இருந்தும், வெளி மாநிலங்களிலிருந்தும் மாடுகள் விற்பனைக்காக கொண்டு வரப்படுகிறது. இதனை பெரும்பாலும் கேரள வியாபாரிகளே குறிப்பிட்ட விலை நிர்ணயம் செய்து வாங்கி செல்கின்றனர். இதில் கடந்த ஒரு மாதத்திற்கும் மேலாக, தமிழகத்தின் பல்வேறு பகுதியிலிருந்தம், ஆந்திர மாநிலத்திலிருந்தும் மாடு வரத்து ஓரளவு காண்பபட்டது. வார சந்தை நாளான செவ்வாய் மற்றும் வியாழக்கிழமைகளில் சுமார் 2ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாடுகள் விற்பனைக்காக கொண்டுவரப்பட்டன. ஆனால், தேர்தல் கெடுபிடியால் கேரள வியாபாரிகள் வருகை குறைந்து, மாடு விற்பனை மந்தமாக

இருந்தது. இதனால் மாடு விற்பனைக்கு கொண்டுவந்தவர்கள் வேதனையடைந்தனர்.

இந்நிலையில் நேற்று நடந்த சந்தை நாளில் மாடு வரத்து, கடந்த வாரத்தை விட குறைவாக இருந்தாலும், கேரள பகுதியிலிருந்து வரும் வியாபாரிகள், எல்லைப்பகுதியில் உள்ள சோதனை சாவடிகளில் முறையாக ரசீது பெற்று செல்வதாக கூறப்படுகிறது. இதனால் நேற்று நடந்த சந்தைநாளில் கேரள வியாபாரிகள் மற்றும் சுற்றுவட்டார பகுதியிலிருந்து வியாபாரிகள் அதிகளவு வந்திருந்தனர். இதனால் மாடு விற்பனை விறுவிறுப்புடன் நடைபெற்றதுடன், அவை கூடுதல் விலை நிர்ணம் செய்யப்பட்டு விற்பனையானது. இதில் கடந்த மாதம் ரூ.28ஆயிரம் முதல் ரூ.32ஆயிரம் வரை விற்பனை செய்யப்பட்ட காளை மாடு, நேற்று ரூ.35ஆயிரம் முதல் 40ஆயிரம் வரை விலை போனது. அதுபோல் ரூ.24ஆயிரத்து விற்பனையான எருமைமாடு ரூ.32ஆயிரத்துக்கும், கன்றுகுட்டி ரூ.15ஆயிரத்துக்கும் விலை போனதாகவும், இனி வரும் வாரங்களில் மாடுவிற்பனை மேலும் விறுவிறுப்படையும் என்று வியாபாரிகள் தெரிவித்தனர்.

**புதன்சந்தையில் வரத்து குறைவால் மாடுகள் விலை உயர்வு**

சேந்தமங்கலம், நாமக்கல் மாவட்டம் புதன்சந்தை மாட்டுச்சந்தை தமிழக அளவில் பிரசித்தி பெற்றது. திங்கள்கிழமை இரவு முதல் செவ்வாய் மதியம் வரை மாட்டுச்சந்தை கூடுவது வழக்கம். மாடுகளை வாங்க, கோவை, பொள்ளாச்சி, ஈரோடு ஆகிய பகுதிகளிலிருந்தும், கேரளா, ஆந்திரா, கர்நாடகா உள்ளிட்ட மாநிலங்களில் இருந்தும் ஏராளமான வியாபாரிகள் வருவர். 2 நாட்களில் மட்டும் கோடிக்கணக்கில் வியாபாரம் நடைபெறும்.

இந்நிலையில் நேற்று கூடிய மாட்டுச்சந்தையில் கோடை வெயிலின் காரணமாக, குறைந்த அளவே மாடுகள் விற்பனைக்கு வந்திருந்தது. கேரள மாநிலம் மற்றும், பொள்ளாச்சி, கோவை உள்ளிட்ட பகுதிகளிலிருந்து அதிக அளவில் வியாபாரிகள் வந்திருந்தனர். மாடுகளை

வாங்க வியாபாரிகளிடையே கடும் போட்டி நிலவியது. இதனால் மாடுகளின் விலை சற்று உயர்ந்தது. கடந்த வாரம் ரூ.28 ஆயிரத்திற்கு விற்கப்பட்ட இறைச்சி மாடு இந்த வாரம் ரூ.30 ஆயிரத்திற்கு விற்கப்பட்டது. இதேபோல கடந்த வாரம் ரூ.48 ஆயிரத்திற்கு விற்கப்பட்ட கறவை மாடு ரூ.51 ஆயிரத்திற்கு விற்கப்பட்டது. 6 ஆயிரத்திற்கு விற்கப்பட்ட கன்றுக்குட்டி ரூ.7 ஆயிரத்திற்கு விற்கப்பட்டது.

## தேவைக்கேற்ப வேளாண் கருவிகள் வழங்க வேண்டும் விவசாயிகள் கோரிக்கை

கரூர், : உழவுப் பணிக்கு வேளாண் கருவிகளை தேவைக்கேற்ப வழங்கவேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். கரூர் மாவட்டத்தின் ஆண்டு சராசரி அளவை விட அதிகமாக மழை பெய்தது. மேலும் தற்போது கோடை மழையை எதிர்பார்த்துள்ளனர். கோடை உழவு செய்ய மழைநீர் ஓடி வீணாகாமல் அந்த நிலத்திலேயே சேமிக்க வேளாண் துறை விவசாயிகளுக்கு அறிவுறுத்தியுள்ளது. கரூர் மாவட்டத்தில் கரூர், கிருஷ்ணராயபுரம், குளித்தலை வட்டாரப் பகுதிகளில் காவிரி பாசன விவசாயிகள் வேளாண் பணிகளை மேற்கொண்டுள்ளனர்.

உழவுப்பணிக்கு வேளாண் பொறியியல் துறை, தொடக்க கூட்டுறவு கடன் சங்கத்தில் வேளாண் கருவிகள் விவசாயிகளுக்கு வாடகைக்கு விடும் முறை உள்ளது. பொறியியல் துறையில் உழுவை இயந்திரம் வாடகையாக மணிக்கு ரூ.390, மண் தள்ளும் இயந்திரம் மணிக்கு ரூ.950ம் வசூலிக்கப்படுகிறது. தேவைப்படும் விவசாயிகள் வாடகைத் தொகையை முன்கூட்டியே செலுத்தி பெயர் பதிவு செய்து பெற்று வருகின்றனர்.

நடப்பு பருவத்தில் நெல், சிறுதானியம், பயறு, எண்ணை வித்து, சாகுபடிக்கு விவசாயிகள் முனைப்புகாட்டி வருகின்றனர். மேற்கண்ட வேளாண் கருவிகள் உரிய காலத்தில் கிடைப்பதில்லை. சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கேட்டால் வேறு ஏரியாவுக்கு போய் இருப்பதாகவும்

வந்ததும் அனுப்பி வைக்கப்படும் என்பதுதான் பதிலாக கிடைக்கிறது. விவசாயிகளின் தேவைக்கு ஏற்ப உடனுக்குடன் வேளாண் கருவிகளை வழங்க வேண்டும். சம்பா பருவ அறுவடை பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. மேலும் சிறுதானியம், பயறுவகை, கரும்பு, எண்ணைவித்துப் பயிர்களின் சாகுபடி வேலைகளுக்கும் தேவையான கருவிகளை உடனுக்குடன் வழங்க வேண்டும்.

ஆழ்குழாய் கிணற்றில் இருந்து நீரை இரைப்பதற்கு 5 எச்பி திறன்கொண்ட ஏசி நீர்மூழ்கி பம்புகள் பொறியியல் துறை மூலம் அமைத்துக் கொடுக்க அரசு உத்தரவிட்டுள்ளது. சோலார் பம்பு, நீர்மூழ்கி பம்புகள் அமைக்க ஆகும் செலவு ரூ.4 லட்சம். இவற்றில் 80 சதவீதம் மானியம் போக விவசாயியின் பங்கு தொகையாக ரூ.80 ஆயிரம் செலுத்தும் திட்டம், மேலும் சோலார் பம்புகள் மானியத்தில் வழங்கப்படுகிறது. இதுபோன்ற திட்டங்களை விவசாயிகளிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தி உடனுக்குடன் பயன்பெற நடவடிக்கை எடுக்கவேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## கரூர் மார்க்கெட்டில் பூக்கள் வரத்து அதிகரிப்பு

கரூர், : நாளை சித்திரை மாத பிறப்பையொட்டி பூக்களின் வரத்து கரூர் மார்க்கெட்டில் அதிகமாக இருந்தது. கடந்த ஆண்டு பெய்த மழை காரணமாக பூக்களின் விளைச்சல் பாதிக்கப்பட்டது. இதனால் பூக்களின் விலையும் அதிகமானது. மல்லிகை பூ கிலோ ரூ.500 வரை விற்பனையானது. மேலும் வரத்தும் இல்லாத நிலைமை காணப்பட்டது. தற்போது பூக்களின் விளைச்சல் நன்றாக இருப்பதால் வரத்தும் அதிகமாக இருக்கிறது. கரூர் மாரியம்மன் பூ மார்க்கெட்டிற்கு பூக்கள் வரத்து அதிக அளவில் இருந்தது. நாளை சித்திரை பிறப்பையொட்டி பூக்கள் அதிக அளவில் தேவைப்படும் என்பதால் நேற்று பூ மார்க்கெட்டிற்கு பூக்களை வாங்க ஏராளமான வியாபாரிகள் வந்திருந்தனர். மல்லிகை பூ கிலோ ரூ.60 முதல் ரூ.80 வரை ஏலம் விடப்பட்டது. முல்லை ரூ.80, ரோஜா ரூ.60, சம்பங்கி ரூ.60, அரளி ரூ.120. மருவு ரூ.60, மரிக்கொழுந்து கட்டு ரூ.30க்கு விலை போனது.

**பூச்சி மேலாண்மயில் அதிக அக்கறை காட்டுங்கள் வேளாண்துறை ஆலோசனை**

பழநி,: பூச்சி மேலாண்மையில் அதிக அக்கறை காட்ட வேண்டும் என வேளாண் துறையினர் ஆலோசனை வழங்கி உள்ளனர். தமிழகத்தில் சாகுபடி செய்யப்படும் முக்கிய எண்ணெய்வித்து பயிர்களில் நிலக்கடலை, எள், ஆமணக்கு, சூரியகாந்தி ஆகியவை முக்கிய பயிர்களாக விளங்குகின்றன. தமிழகத்தில் சுமார் 5.02 லட்சம் ஹெக்டேர்களில் எண்ணெய்வித்து பயிர்கள் மானாவாரியாகவும், இறவையிலும் சாகுபடி செய்யப்படுகின்றன. எண்ணெய் வித்து பயிர்களில் ஆமணக்கு அதிகளவில் சாகுபடி செய்யப்படுபவை ஆகும்.

தமிழகத்தில் ஆமணக்கு மானாவாரியில் ஏப்ரல்-மே, ஜூன்-ஜூலை, ஜூலை- ஆகஸ்டு பட்டங்கள் மிகவும் உகந்தவை. ஆமணக்கு பயிரிட பாத்தி அமைத்தல், உரமிடுதல், நுண் ஊட்டமிடுதல், ஊட்டச்சத்து கலவை தெளிப்பு, விதை அளவு, விதை நேர்த்தி, களை கட்டுப்பாடு, பாசனம் ஆகியவற்றை வேளாண்துறையினிடம் ஆலோசனை பெற்று அதன்படி கடைபிடித்தால் நல்ல விளைச்சல் பெறலாம்.

அதுபோல் பூச்சி மேலாண்மையில் விவசாயிகள் அதிக அக்கறை காட்ட வேண்டும். கோடை மழைக்கு முன் வரப்புகளிலும், நிழலான இடங்களிலும், மண்ணில் புதைந்துள்ள கூட்டுப்புழுக்களை உழவு செய்து வெளிக்கொண்டு வந்து அழிக்க வேண்டும். விளக்குப்பொறி அல்லது தீப்பந்தம் வைத்து தாய் அந்திப்பூச்சிகளைக் கவர்ந்து அழிக்க வேண்டும். பயிர்களில் இடப்பட்டுள்ள முட்டைகளை சேகரித்து அழிக்க வேண்டும். தாக்கப்பட்ட வயல்களைச் சுற்றி 30 சென்டிமீட்டர் ஆழம் மற்றும் 25 சென்டிமீட்டர் அகலத்தில் செங்குத்தாக குழிகள் அமைத்து புழுக்கள் பாதிக்கப்பட்ட வயல்களில் இருந்து பரவுவதை தடுக்க வேண்டும்.

ஹெக்டருக்கு 25 கிலோ என்ற அளவில் பாசலோன் 4%, கார்பாரில் 10%, பெனிட்ரோதியான் 2% ஆகியவை கலந்து தெளிக்க வேண்டும். 1

ஹெக்டேருக்கு சூடோமோனாஸ் ஃபுளூரசன்ஸ் 2.5 கிலோவுடன், 50 கிலோ மக்கிய தொழுவுரத்தை கலந்து தெளிக்க வேண்டும். மேலும், நோய் தென்படும் இடங்களில் கார்பன்டாசிம் லிட்டருக்கு 1 கிராம் என்ற அளவில் கலந்து தெளித்தால் பூச்சிகளின் தாக்குதல் இருக்காது. இதுதொடர்பான கூடுதல் தகவல்களுக்கு அந்தந்த பகுதி வேளாண் அலுவலர்களையோ அல்லது வேளாண் அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம் என வேளாண்துறையினர் தெரிவித்துள்ளனர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

## ரசாயன கல் வைத்து பழுக்க வைத்த 400 கிலோ மாம்பழங்கள் பறிமுதல்



பொள்ளாச்சி,

பொள்ளாச்சியில் ரசாயன கல் வைத்து பழுக்க வைத்த 400 கிலோ மாம்பழங்களை உணவு பாதுகாப்புத்துறை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

<u>மாம்பழங்கள் பறிமுதல்</u>

பொள்ளாச்சி மார்க்கெட்டுக்கு மாம்பழங்கள் வரத்து அதிகரித்து உள்ளது. இந்த நிலையில் ஒரு சில வியாபாரிகள் மாம்பழங்களை கார்படைடு என்னும் ரசாயன கல் வைத்து பழுக்க வைப்பதாக உணவு பாதுகாப்பு துறை அதிகாரிகளுக்கு பல்வேறு புகார்கள் வந்தன. இதனை தொடர்ந்து கோவை மாவட்ட உணவு பாதுகாப்புத்துறை நியமன அலுவலர் விஜய் ரசாயன கல்வைத்து பழுக்க வைக்கும் மாம்பழங்களை பறிமுதல் செய்ய உத்தரவிட்டார்.

இதனைதொடர்ந்து பொள்ளாச்சி மார்க்கெட் பகுதியில் உணவு பாதுகாப்புத்துறை அதிகாரிகள் கோவிந்தராஜ், சுப்புராஜ், செல்வபாண்டியன், செந்தில்குமார் ஆகியோர் நேற்று அதிரடி ஆய்வு மேற்கொண்டனர். அப்போது ஒரு சரக்கு ஆட்டோவில் மாம்பழங்களை ஏற்றிக் கொண்டு சிலர் வந்தனர். அந்த ஆட்டோவில் சோதனை செய்ததில், மாம்பழங்கள் பழுக்க ரசாயன கல் வைக்கப்பட்டு இருப்பது தெரியவந்தது. இதையடுத்து அதிகாரிகள் சரக்கு ஆட்டோவில் இருந்த 400 கிலோ மாம்பழங்களை பறிமுதல் செய்தனர்.

<u>வயிற்றுப்போக்கு ஏற்படும்</u>

இதுகுறித்து உணவு பாதுகாப்புத்துறை அதிகாரிகள் கூறியதாவது:– கார்படைடு என்னும் ரசாயன கல் வைத்து பழக்க வைக்கப்படும் மாம்பழங்களை சாப்பிடுவதால் வயிற்றுப்போக்கு ஏற்படும். மேலும் ரத்த புற்றுநோய் ஏற்படவும் வாய்ப்பு உள்ளது. எனவே ரசாயன கல் வைத்து மாம்பழங்கள் பழுக்க வைக்கிறார்களா? என்பது குறித்து பொள்ளாச்சி மார்க்கெட் பகுதியில் ஆய்வு நடத்தப்பட்டது.

கடைகளில் யாரும் ரசாயன கல் வைத்து மாம்பழங்களை பழுக்க வைப்பதாக கண்டறியப்படவில்லை. அதே நேரத்தில் மார்க்கெட்டுக்கு சரக்கு ஆட்டோவில் கொண்டு வரப்பட்ட மாம்பழங்கள் ரசாயன கல் வைத்து பழுக்க வைக்கப்பட்டு இருப்பது தெரியவந்தது. இதையடுத்து 400 கிலோ மாம்பழங்களை பறிமுதல் செய்யப்பட்டன. பறிமுதல் செய்யப்பட்ட மாம்பழங்களை அழிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

**தஞ்சையில் இருந்து திண்டுக்கல்லுக்கு 1,200 டன் புழுங்கல்அரிசி சரக்குரெயிலில் அனுப்பி வைக்கப்பட்டது**

தஞ்சையில் இருந்து சரக்கு ரெயிலில் 1,200 டன் புழுங்கல் அரிசி திண்டுக்கல்லுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

நெல் கொள்முதல்

தமிழகத்தில் பொதுவினியோக திட்டத்தின் கீழ் குடும்ப அட்டைதாரர்களுக்கு புழுங்கல்அரிசி, பச்சரிசி, மண்எண்ணெய், சர்க்கரை, பருப்பு போன்றவை வழங்கப்பட்டு வருகிறது. இதற்காக வெளிமாநிலங்களில் இருந்தும், வெளிமாவட்டத்தில் இருந்தும் புழுங்கல்அரிசி, பச்சரிசி போன்றவை தஞ்சை மாவட்டத்திற்கு கொண்டு வரப்படும். அதேபோல் தஞ்சையில் இருந்தும் பிற மாவட்டங்களுக்கு புழுங்கல்அரிசி, பச்சரிசி போன்றவை அனுப்பி வைக்கப்படும்.

தமிழகத்தின் நெற்களஞ்சியமாக விளங்கும் காவிரி டெல்டா மாவட்டங்களில் குறுவை, சம்பா, தாளடி என 3 போகம் நெல் சாகுபடி நடைபெறும். இது தவிர கோடை நெல் சாகுபடியும் நடைபெறுவது வழக்கம். இவ்வாறு சாகுபடி செய்யும் நெல் அறுவடை செய்யப்பட்டு, தமிழகஅரசின் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மூலம் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. இவ்வாறு கொள்முதல் செய்யப்படும் நெல், தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களுக்கு அரவைக்காக ரெயில் மற்றும் லாரிகள் மூலம் அனுப்பி வைக்கப்படும். மேலும் தஞ்சை மாவட்டத்தில் உள்ள அரசு மற்றும் தனியார் அரிசி ஆலைகளுக்கும் அரவைக்காக அனுப்பி வைக்கப்படுவது வழக்கம்.

1,200 டன் புழுங்கல் அரிசி

அவ்வாறு அரவைக்கு அனுப்பி வைக்கப்பட்ட நெல் பின்னர் பல்வேறு மாவட்டங்களுக்கு பொது விநியோகத்திட்டத்தில் வினியோகம் செய்ய அரிசி மூட்டைகளாக அனுப்பி வைக்கப்படுகிறது. அதன்படி தஞ்சை மாவட்டத்தில் உள்ள பல்வேறு அரிசி ஆலைகளில் இருந்து லாரிகளில் அரிசி மூட்டைகள் ஏற்றப்பட்டு தஞ்சை ரெயில் நிலையத்திற்கு நேற்று கொண்டு வரப்பட்டன.

பின்னர் இந்த அரிசி மூட்டைகள் சரக்குரெயிலில் ஏற்றப்பட்டன. மொத்தம் 21 வேகன்களில் 1,200 டன் புழுங்கல்அரிசி ஏற்றப்பட்டுதிண்டுக்கல்லுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

## தூத்துக்குடியில் இருந்து சரக்குரெயிலில் 1,310 டன் யூரியா உரம் தஞ்சைக்கு வந்தது



தஞ்சைக்கு வந்த உர மூட்டைகளை தொழிலாளர்கள் லாரிகளில் ஏற்றிய போது எடுத்த படம்.

தூத்துக்குடியில் இருந்து சரக்குரெயிலில் 1,310 டன் யூரியா உரம் தஞ்சைக்கு வந்தது.

யூரியா உரம்

தமிழகத்தின் நெற்களஞ்சியமாக காவிரி டெல்டா மாவட்டங்கள் விளங்குகின்றன. இங்கு குறுவை, சம்பா, தாளடி என 3 போகம் நெல் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இது தவிர கோடை நெல் சாகுபடியும் நடைபெறும். தற்போது தஞ்சை மாவட்டத்தில் கோடை நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. நெல் சாகுபடிக்கு தேவையான யூரியா, பொட்டாஷ், டி.ஏ.பி. உரம், காம்ப்ளக்ஸ் உரம் ஆகியவை வெளிமாவட்டங்களில்

இருந்தும், வெளிமாநிலங்களில் இருந்தும் இறக்குமதி செய்யப்படுவது வழக்கம்.

அதன்படி கோடை நெல் சாகுபடிக்காக தூத்துக்குடி துறைமுகத்தில் இருந்து யூரியா உரமூட்டைகள் சரக்குரெயிலில் ஏற்றப்பட்டு, தஞ்சை ரெயில் நிலையத்திற்கு நேற்று கொண்டு வரப்பட்டன. மொத்தம் 21 வேகன்களில் 1,310 டன் யூரியா உர மூட்டைகள் வந்திருந்தன. பின்னர் இந்த உர மூட்டைகளை தொழிலாளர்கள் லாரிகளில் ஏற்றினர்.

தட்டுப்பாடு இன்றி

இதையடுத்து உர மூட்டைகள் தஞ்சை, பட்டுக்கோட்டை, கும்பகோணம், மன்னார்குடி ஆகிய பகுதிகளில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டன. கூட்டுறவு விற்பனை இணைய மண்டல அலுவலர் செல்வக்குமார் கூறும்போது, கோடை நெல் சாகுபடிக்கு தேவையான உரங்களை தட்டுப்பாடு இன்றி விவசாயிகளுக்கு வழங்குவதற்காக பிற மாவட்டங்களில் இருந்து தஞ்சைக்கு யூரியா உரம் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. இந்த உரங்கள் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்படும் என்றார்.

## உத்தமபாளையம் பகுதியில் விளையும் கொய்யா பழங்களுக்கு கேரளாவில் வரவேற்பு



உத்தமபாளையம்

உத்தமபாளையம் பகுதியில் விளையும் கொய்யா பழங்களுக்கு கேரளாவில் பரவலாக வரவேற்பு இருந்து வருகிறது.

<u>விளைச்சல் அதிகரித்துள்ளது</u>

தேனி மாவட்டம் கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் நெல், வாழை, தென்னை, கருப்பு திராட்சை ஆகியவற்றின் விவசாயம் அதிகமாக உள்ளது. அதே நேரத்தில் உத்தமபாளையம் பகுதியில் உள்ள தே.சிந்தலைச்சேரி, மேலசிந்தலைச்சேரி, எர்ணம்பட்டி, தருமாபுரி உள்ளிட்ட பகுதிகளில் அதிக அளவில் கொய்யா விவசாயம் செய்யப்பட்டு வருகிறது. இங்கு விளையும் கொய்யா பழங்கள் சென்னை, மதுரை, உள்ளிட்ட நகரங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

மேலும் கேரளாவுக்கும் இந்த பழங்கள் அதிகமாக அனுப்பப்பட்டு வருகிறது. உத்தமபாளையம் பகுதிகளில் இருந்து கொய்யா பழங்களை கொள்முதல் செய்வதற்காக அதிக எண்ணிக்கையில் வியாபாரிகள் வருகின்றனர். தற்போது இந்த பகுதியில் கொய்யா விளைச்சல் அதிகரித்துள்ளது.

இதனால் அவற்றை விவசாயிகளிடம் இருந்து மொத்த விலைக்கு கொள்முதல் செய்து வியாபாரிகள் கேரள மாநிலத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் அனுப்பி வருகின்றனர். இதுகுறித்து விவசாயிகள் கூறியதாவது:–

## மொத்த விலையில் கொள்முதல்

உத்தமபாளையம் ஒன்றிய பகுதிகள் வறட்சி நிறைந்ததாக உள்ளது. இந்த பகுதி விவசாயிகளின் முக்கிய நீர்ஆதாரமாக 18–ம் கால்வாய் திட்டம் உள்ளது. ஆனால் இந்த கால்வாயில் ஆண்டுக்கு ஒருமுறை மட்டுமே தண்ணீர் திறக்கப்படுகிறது. இதன்மூலம் இந்த பகுதிகளில் உள்ள 44 குளங்களும் நிறைந்தால் மட்டுமே நிலத்தடி நீர்மட்டம் உயரும்.

காய்கறி விவசாயம் செய்வதற்கு போதுமான அளவு தண்ணீர் தற்போது இல்லை. எனவே பலரும் சொட்டுநீர் பாசனம் மூலம் கொய்யா விவசாயம் செய்து வருகிறோம். தற்போது கொய்யா விளைச்சல் நன்றாக உள்ளது. இதனால் உள்ளூர் வியாபாரிகள் எங்களிடம் ஒரு கிலோ ரூ.20 என்று மொத்த விலையில் கொள்முதல் செய்கின்றனர். பின்னர் அவற்றை கேரளாவின் பல்வேறு பகுதிகளுக்கும் அனுப்பி வைக்கின்றனர்.

உத்தமபாளையம் கொய்யா பழங்களில் கூடுதல் சுவை இருப்பதால் கேரளாவில் இவற்றுக்கு நல்ல வரவேற்பு உள்ளது.

இவ்வாறு அவர்கள் கூறினர்.